அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண் : 140 / 2017
தேதி : 21.11.2017

**டிஜிட்டல் பேனர்கள் தொழில் சார்ந்தவர்கள் வாழ்வாதாரம் கருதி,**
**தமிழக அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.**

டிஜிட்டல் பேனர்கள், போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக இருக்கிறது என்ற பல்வேறு காரணங்களை முன்னிட்டு, உயர்நீதிமன்றத்தில் அவை தடைசெய்யப்பட்டிருப்பதோடு, அவற்றில் உயிரோடு இருப்பவர்களின் படங்கள் இடம்பெறக் கூடாது என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டிருக்கிறது.

டிஜிட்டல் பேனர்கள், அரசியல் கட்சிகள், திரைப்படங்கள் போன்ற துறைகள் மட்டும் பயன்படுத்துபவை அல்ல. நகரம், கிராமம் வேறுபாடு இல்லாமல், திருமணம் போன்ற குடும்ப நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள், கோவில் திருவிழாக்கள் என பல்வேறு நிகழ்வுகளுக்கும் மற்றும் வணிகம் சார்ந்த விளம்பரங்களுக்கும் பேனர்கள் வைக்கும் கலாச்சாரம் வெகுவாகப் பரவியிருக்கிறது.

இதனால் ஒரு காலத்தில் பெரு நகரங்களில் மட்டுமே, டிஜிட்டல் பேனர் அச்சிடும் தொழில்கள் இருந்த நிலையில், தற்சமயம், சிறு நகரங்கள், சில வளர்ச்சியடைந்த கிராமங்களிலும் இத்தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

வங்கிக்கடன், சொந்த நிதி போன்று பல்வேறு முதலீடுகளைச் செய்து இத்தொழிலில், சுமார் 3000 உரிமையாளர்களும் பேனர்கள் டிசைன் செய்பவர்கள், இயந்திரப் பணியாளர்கள், பேனர்களை கட்டுமானம் செய்பவர்கள், அதனைச் சார்ந்த ஊழியர்கள் என்று சுமார் 5.5 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் இத்தொழிலை நம்பி இருக்கிறார்கள்.

உயர்நீதிமன்ற உத்தரவையடுத்து, பேனர்கள் வைப்பது வெகுவாகக் குறைந்துவிட்டதால், பேனர்கள் அச்சடிக்கும் தொழில் முற்றிலும் நலிவடைந்திருப்பதாகவும், இத்தொழிலை நம்பியிருக்கும் லட்சக்கணக்கான தொழிலாளர்களின் குடும்ப வாழ்வாதாரங்கள் கேள்விக்குறியாகிவிட்டதகவும் அறிகிறேன்.

எனவே தமிழக அரசு உயர்நீதிமன்றத்தில், பேனர்களை மீண்டும் வைப்பது தொடர்பாக, சில நிபந்தனைகளையும், வழிமுறைகளையும் வகுத்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்து பாதிக்கப்பட்ட இத்தொழிலை உடனடியாக நடத்துவதற்கு தமிழக அரசு துரித நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அதன்படி

1. எல்லாவித பேனர்களுக்கும் காவல்துறை / அரசு முன் அனுமதி பெறப்பட வேண்டும். அதே நேரத்தில் அனுமதியை எளிமைப்படுத்தி உடனடியாக வழங்கப்படவேண்டும்.

2. பேனர்கள் வைக்கப்படும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு, அங்கு பேனர்கள் வைக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

3. பேனர்கள் மற்றும் கட் அவுட்களின் நீள, அகல உயரங்கள் வரையறுக்கப்பட வேண்டும்.

4. பேனர்கள் வைப்பதற்கு அனுமதிக்கப்படும் இடங்கள் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல், பொதுமக்களின் நடமாட்டத்திற்கு அச்சுறுத்தலும், இடையூறும் இல்லாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

5. எத்தனை நாள்களுக்கு வைக்கப்பட வேண்டும் என்பதை முடிவு செய்து அதற்கு மேல் நீட்டிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

மேற்கண்ட விதிமுறைகள் நடைமுறையில் இருந்தாலும், இவை முறையாகப் பின்பற்றப்படுகின்றவை என்பதை அரசு உறுதி செய்ய வேண்டும். பேனர்கள் வைப்பவர்களும் இதுபோன்ற விதிமுறைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும்.

தமிழக அரசு மேல்முறையீடு செய்து விளக்கம் அளிப்பதன் மூலமும், இது தொடர்பாக சட்டத்திருத்தம் கொண்டு வருவதன் மூலமும், பேனர்கள் மீண்டும் வைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும். இதன்மூலம், இத்தொழிலை நம்பியிருக்கும் உரிமையாளர்கள் மற்றும் லட்சக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரங்களைக் காத்திட தமிழக அரசு கருணையோடு முன்வர வேண்டும் என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் தமிழக அரசை வலியுறுத்துகிறேன்.

நன்றி வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com